RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt22s840
OPEN ACCESS

# ஆலய கல்வெட்டு மற்றும் சிற்பங்களில் இசைக் கருவிகள் ஓர் கண்ணோட்டம்

ப. திவ்யரூப சர்மா [அ, *]

[அ] இசைத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்-608002, தமிழ்நாடு, இந்தியா

# An Overview of Musical Instruments in Temple Inscriptions and Sculptures

P. Thivyarooba Sarma [a, *]

[a] Department of Music, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India

* Corresponding Author: sarmamir@gmail.com

Received: 23-04-2021
Revised: 30-05-2022
Accepted: 08-06-2022
Published: 09-08-2022

## ABSTRACT

Temple inscriptions and sculptures bear testimony to what the Tamil music tradition would have been like many years ago. Although music has not been given a special place in the history of inscriptions, many temples have images of musical instruments engraved in inscriptions and sculptures. During the reign of the king, the art of inscription and sculpture was developed. Music is an integral part of human life. Early man classified lands based on nature and associated music with divine worship. Temple inscriptions and sculptures record references to dance, song, musicians, and musical instruments. Inscriptions and sculptures are widely used to remind people of current events. There is an example for laymen and researchers to learn and understand the shapes of musical instruments. Texts such as Tamilar Music, Panchamarapu, and Tamilar Torkaruviyal give us references to many musical instruments. The shapes of the images can be seen in person in the inscriptions in the temple. Descriptions of music and musical instruments can be found in inscriptions and sculptures at Thillai Nataraja Temple in Chidambaram, Ekambaranathar Temple, Kailasanathar Temple in Kanchipuram, Mamallapuram Gangaikonda Cholapuram, Nellaiappar Temple in Tirunelveli, Tarasuram Temple in Kumbakonam, Kudavarik Temple in Tirumeyyam in Pudukottai District, Arunachaleswarar Temple in Tiruvannamalai, Thiruvattaru.

**Keywords:** Kurinji, Veriyattu, Seppedu, Osai, Thonmai

## முன்னுரை

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று நம் முன்னனோர்கள் கூறுவர் (Subramaniyan, 1996). ஆலயம் என்ற சொல் ஆ+லயம் ஆ என்பது ஆன்மா என்றும், லயம் என்பது நிலைப்படுத்துவது. ஆக ஆன்மாவை நிலைப்படுத்துவதே ஆலயம் என்ற சொல்லாகும். கோயில் என்றசொல் கோ+இல் கோ என்பது இறைவன், அரசன் என்றும் இல் என்பது இருப்பிடம் எனவே இறைவன் இருப்பிடமே கோயில் என்று கூறுகின்றோம். பிறவிப் பெருங்கடலில் மூழ்கித் தத்தளிக்கும் ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி, மனமதைச் செம்மைசெய்து ஞானம் பெறச்செய்வது திருக்கோயில்களாகும். ஆலயத்திற்கு வடமொழிச் சொல்லே "ஸ்தலம்" என்பதாகும். ஆலயம் என்பது தலம், கோயில், தானம், அம்பலம், தளி என்று பலவாறாக கூறுகின்றோம்.

இசைக்குரிய ஓசைகள் ஐந்து பொருள்களில் உண்டாகின்றன. அப்பொருள்கள் தோற்கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி மற்றும் மிடறு (தொண்டை) என்பன. இவற்றில் உண்டாகும்

ஓசைகளை ஒழுங்குபடுத்தி இசையை அமைத்தனர் இசைவல்லுனர்கள். மேலும் ஆய கலைகளில் நான்காவது கலை இசைக்கலை எனப்படுகிறது. இதனை இசைத்தமிழ் என்றும் கூறுவர். இது காதால் கேட்டு இன்புறத்தக்க இன்கலை. இக்கலையை பல்வேறு வடிவங்களில் பல்வேறு தொனிகளில் வெளிப்படுத்தும் திறன்கொண்டவை இன்றுவரை எங்கும் வியாபித்திருக்கும் இசைக்கருவிகளாகும்.

இவ்வாறான இசைக்கருவிகள் தமிழகக் கோயில்களில் கலைச்சேவை செய்துகொண்டு இருக்கின்றன. சைவமும், வைணவமும் தழைத்துநிற்கும் தமிழகத்தில் தேவார மூவரும், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் போன்றோரும் தலங்கள் தோறும் சென்று பாடியுள்ளனர். இவையே தேவாரம், திவ்யபிரபந்தம் என்பவையாகும். இவர்களின் பாடல்களில் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றனகள் ஆய்வினையும் மற்றும் விவரண ஆய்வினையும் ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## இசைக் கருவிகள் தோன்றியவிதம்

அக்கால இயற்கைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து கூறுகளாக வகைப்படுத்தி, அந்தந்த நிலங்களுக்கென தெய்வம், பண், இசைக்கருவி எனவகைப்படுத்தி வழிபாடு செய்ததாகத் தொல்காப்பியத்தில் குறிப்புகள் பல காணப்படுகின்றன. அக்காலத்தில் தாளவிசைக் கருவியாக பறையும், பண்ணிசைக் கருவியாக யாழ் மட்டுமே இருந்துள்ளன. எனினும் இவ்விரு இசைக்கருவிகளின் பிரிவுகளைக் கொண்டு அந்தந்த நிலப்பிரிவிற்கும், வாழ்வியலிற்கும் தக்கவாறு கருவிகளை அமைத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

"தெய்வம் உணாவே மா மரம் புட் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப"

மேலும் இசைக் கருவிகளின் தொன்மை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது இதற்கு ஆதாரமாக பழந்தமிழ் இலக்கியமான தொல்காப்பியத்திற்கு முந்திய நூல்களான இந்திரகாளியம், இசை நுணுக்கம், பஞ்சபாரதீயம் போன்ற நூல்களிலும் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதைக் கொண்டு, இசைக் கருவிகளின் தொன்மையினைத் தெரிந்துகொள்ளமுடிகிறது (Ilampuranar, 2015).

இத்தகைய இசைக்கருவிகளைச் செய்வதற்குக் கூட இயற்கைப் பொருள்களான மரங்களும் அவற்றோடு விலங்குகுளின் தோல்களும் பயன்பட்டிருக்கின்ன. ஆலயத்தின் அருகில் உள்ள மரங்களே பெரும்பாலும் இசைக் கருவிகளை வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு தோற்றம் பெற்ற இசைக்கருவிகள் அரசனுக்கும் உரியனவாக இருந்தன என்பதை தொல்காப்பியர்,

"படையும் கொடியும் குடையும் முரசும்

நடை நவில் புரவியும் களிறும் தேரும்

தாரும் முடியும் நேர்வன பிறவும்

தெரிவு கொள் செங்கொல் அரசர்க்கு உரிய"

அந்த வகையில் இசைக்கருவிகளில் மிகப் பழைய காலத்தில் இருந்துவருவன தோற்கருவிகளாகும் (Ilampuranar, 2015). மானிடவரலாற்றின் பிற்காலங்களில் தான் துளைக் கருவிகளும், நரம்புக் கருவிகளும் ஏற்படலாயின. இதன் அடிப்படையில் புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை ஆகிய பழைய நூல்கள் வேறுசில முழவுகளின் பெயர்களையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு கூடி இருந்தன எனவும் தெரிகிறது. தமிழகத்தில் யாழ், குழல், முரசு போன்ற இசைக்கருவிகள் எண்ணாயிரம் ஆண்டுகளிற்கு முன்பே தோன்றிவிட்டன என்பர் தமிழறிஞர்கள்.

இதனைச் சற்றுவிரிவாக நோக்கின் இசைக்கருவிகளின் தொன்மை வழியில் சங்ககாலத்தினை எடுத்துக்கொண்டால். தமிழ் முத்தமிழாக முன்பே முகிழ்ந்தது. இதில் இசைத்தமிழும் ஒன்று. அத்துடன் பழந்தமிழ் இலக்கியமான சங்கத்தமிழ் நூல்களில் பல இசைக் குறிப்புகள் காணப்படுகின்றன. அதாவது இங்கு இசைபாடுவதற்கென்றே பாணர்கள் என்ற தனிப்பிரிவு மக்கள் இருந்தனர் என்றும் இவர்கள் 'யாழ்' எனும் இசைக் கருவியை வாசிப்பதில் சிறந்தவர்கள் என்பதால் யாழ்ப்பாணர் என்று குறிப்பிடப்பட்டனர். இது ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்தி ஆகும்.

மேலும் சங்கப் பாடல்கள் மூலமாக அக்கால இசைக் கருவிகளின் தோற்றம் பற்றிய பல அரிய செய்திகள் கிடைக்கிறது. அதாவது வில்லின் நாணொலி நரம்புக் கருவியின் தோற்றத்திற்கும், வீரர்கள் வெற்றிப் பெருமிதத்தில் மதுக்குடத்தைத் தட்டி ஆரவாரித்தது தாளவாத்தியத்தின் தோற்றத்திற்கும், தூண்டுதலாக அமைந்திருக்கலாம் எனக் கருத இடமுள்ளதாக சங்கப் பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

சங்ககால இசை உலகில் யாழிற்கே மிகச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டிருந்தாலும், மேலும் பல இசைக்கருவிகள் அக்கால மக்கள் மத்தியில் வாழ்ந்துள்ளன என்பதை இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன. அவற்றுள் பெரும்பான்மையானவை இன்று பெயரளவிலேயே காணப்படுகின்றன.

"அருஞ்சிமையிழிதரும் ஆதர்த்துவரால் அருவியில்

ததும்புசீரின்னியம் கறங்ககைதொழுது

உருகெழுசிறப்பின் முருகுமனைத் தரீஇ"

எனும் அகநானூற்றுப் பாடலில் இக்கால மக்கள் தெய்வ வேண்டுதலாக விழா எடுக்கும் போது இசைக்கருவிகள் முழங்கியதாக குறிப்புகள் காணப்படுகின்றன (Jeyabal, 2004). அதில் மக்கள் நலம்பெறப் பெற்றோர்கள் இறைவனை வாழ்த்திப் பலவகையான இசைக்கருவிகளைக் கொண்டு இசை எழுப்பியதாகக் கூறப்படுகின்றது.

மேலும் குறிஞ்சி நிலத்தில் வேலனுக்கு வெறியாட்டு நடத்தல் வழக்கம் எனக் கூறப்படுகிறது. அதாவது நோயுற்றவர்கள் அந்த நோய் தீர வேலனை அழைத்து வெறியாட்டு நடத்துவர். அந்த நிகழ்வில் இசைக்கருவிகள் பெருமிதத்துடன் இசைக்கப்பட்டிருக்கின்றன என்பதை,

"நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி

நறும்புகைஎடுத்துக் குறிஞ்சிபாடி

இமிழிசைஅருவியோடின்னியங் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவர"

எனும் திருமுருகாற்றுப்படைப் பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது. இதில் இருந்து ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம் (Somasundranaar, 1956). அதாவது இசையின் தொன்மை, இசைக்கருவிகளின் தொன்மை என எவ்வகையில் ஆராய்ந்து பார்க்கும் போதும் அவை இறைவனுக்கு படைக்கும் விருந்தாகத்தான் விளங்குகின்றது. இதில் இருந்து அக்காலத்தில் இசைக்கருவிகளின் பயன்பாடு ஆலய வழிபாடுகளில் எத்தகையது என அறியக்கூடியதாக உள்ளது.

## கல்வெட்டுகளின் விளக்கம்

காலக்கடப்பில் முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றிய அரிய செய்திகள் பின்வரும் சந்ததிகளுக்கு எட்டாது மறைந்துவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தில் அவற்றைக் கல்லிலும் செப்பேடுகளிலும் பொறித்துவைப்பது முற்கால மன்னர்களின் வழக்கம். அவை சிறப்பான வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. நடப்புகளை உண்மையாக உறுதிப்படுத்த அவை நன்கு உதவும். திட்டமிட்டு அழித்தால் அன்றி அவை அழியாது. மறைவாக இருந்தாலும் மறைக்கப்பட்டாலும் அவை என்றாவது ஒருநாள் ஏதாவது ஒருவழியில் வெளிப்பட்டு நடப்பு உண்மைகளை நல்லமுறையில் புலப்படுத்திக்

காட்டிவிடும். ஆகையினால் வரலாற்றுத் துறைக்குக் கல்வெட்டுக்கள் கிடைப்பதற்கு அரிய செல்வங்களாகும்.

தமிழ் மன்னர்கள் பலர் தங்களுடைய ஆட்சியில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளைக் கோயிலிலுள்ள கற்சுவர்கள், பலர் காணத்தக்க பாறைகள், செப்புத் தகடுகள் ஆகியவற்றில் பொறித்துவைத்துள்ளனர். காலவோட்டத்தில் மக்களின் வாழ்விடங்களும், வாழ்வியலும் மாறுவதினால் முக்கியமான இடங்கள் பாழிடங்களாக மாறிவிடுகின்றன. பாழான இடங்களில் பொறித்துள்ள செய்திகள் பிற்கால மக்களின் கண்களில் படாது மறைந்து விடுகின்றன. அறிவைத் தேடியலையும் அயரா முயற்சியுடைய நல்லறிஞரின் அரிய கண்டுபிடிப்புக்களாக இன்று பல கல்வெட்டுக்கள் வெளியாகி உயரிய பல உண்மைகளை உலகுக்கு அறிவிக்கின்றன.

ஆட்சி முறைகள், போர்ச் செய்திகள், சமயக் கருத்துக்கள், அறக்கோட்பாடுகள், வீரச் செயல்கள், கலைத் தன்மைகள், கொடைச் சிறப்புக்கள் போன்ற பலவற்றைப் பற்றிய உண்மைகள் கல்வெட்டுக்கள் வாயிலாக தெரியவருகின்றன. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேற்றிடங்களிலுள்ள சில கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டுச் செய்திகளை தாங்கியுள்ளன. அவை அனைத்தையும் திரட்டிக் காணின் வரலாற்று உண்மைகள் உறுதியாகும்.

## இசை பற்றிய கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்களில் இசை பற்றிய செய்திகளை மட்டும் தனியாகக் குறிப்படாவிட்டாலும் பல அரிய செயல்களைக் கூறும்போது இசைக்கும் ஓரிடம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கல்லில் செய்திகளைப் பொறிக்கும் காலத்தில் இசைக்கு நல்ல மதிப்பு இராவிட்டால் அது கல்வெட்டில் இடம் பெறாது விடப்பட்டிருக்கும்; பல கல்வெட்டுக்களில் இசை பற்றிய குறிப்பு காணப்படுவதினால் அக்காலத்தில் இசைக்கு மன்னனும் மக்களும் சிறப்பிடம் கொடுத்துள்ளனர் என்ற உண்மையை நன்கு அறியலாம். ஆடல் கூத்து போன்ற கலைகள் இசையுடன் பிரியாத் தொடர்பு கொண்டவை. ஆகையினால் அக்கலைகளைப் பற்றிய குறிப்பில் இசைக் கலைச் செய்திகள் இணைந்து காணப்படுகின்றன.

திருவிசலூர்க் கோயில் கங்காதிரன் ஆடவல்லானான ஆண்டநாயக சாக்கையும் சாசிவன் பேரரியான் நாங்கூர் சாக்கையும் கூத்தாடும்போது ஒப்பனை செய்துகொள்ளத் தேவையான பொருட்களையம், இசையூட்டுவதற்குக் குடமுழவையும் கோயிலார் தருதல் வேண்டுமென ஏற்பாடானது. இதனால் கோயில்களில் ஆடப்பட்ட கூத்துகளுக்குக் குடமுழவு இன்றியமையாத இசைக்கணருவியாக இருந்ததை அறியமுடிகிறது (Kalaikovan, 2012).

குடமுழா என்ற சொல்லாட்சி மக்கள் வழக்கில் குடமிழா என்றே இருந்துள்ளது என்பதும் இக்கல்வெட்டுத் தொடரால் அறியமுடிகிறது. இதே போன்று தற்போது திருத்துறைப்பூண்டித் திருக்கோயிலில் உள்ள சோழர் கால (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) 'குடமுழவத்தில் ஸ்பஸ்திஸ்ரீ இக்குடவிழ சமைப்பித்திட்டார். சீகாருடையார் மல்லாண்டாரன சோழ கோனார்' என்று பொறிக்கப்பெற்றுள்ளது. குடமுழா என்பது குடவிழா என்று பேச்சு வழக்காக மாறிவிட்டது. எனவே சோழர்கள் காலத்தில் குடமுழா என்ற சொல் பேச்சு வழக்காக மாறிவிட்டது. எனவே சோழர்கள் காலத்தில் குடமுழா என்ற சொல் குடவிழா என்றும் குடமுழா என்றும் எளிய மக்கள் வழக்கில் வழங்கி வந்துள்ளன என்பது தெரியவருகின்றது (Kudavaayil Balasubramanyam, 2013).

திருமெய்யம் கல்வெட்டில் 'முக்கண் இருவர்க்கும் உரித்து' என்று கூறுவதைக் கந்தர்வ வித்தையின் மூன்று பிரிவுகளை உணர்த்துவதாகக் கருதுகின்றனர். கண்டம், கருவி, அவிநயம் என்பவை அம்மூன்று பிரிவுகள் ஆகும். அவ்வாறாயின் கண்டப் பாடல், கருவி இசை, அவிநயக்கூத்து என்பவற்றை அவை குறிப்பிட்டிருக்க வேண்டும். உறுதிப்படுத்த இயலாது.

திருவண்ணாமலையிலுள்ள அருணாசலேஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒரு பெண்மணி பாடிய இசைப்பாட்டைக் குறிப்பிடுவதாக உள்ளது. "திருவாசிகையுஞ் சிங்காசனமுங் கற்பக விருக்கமும் முத்தின் பந்தலு மோடரிமைக்கணுமை யிசைபாடி ஆடிய வதிருங்கழற் பெருமாளுக்கின

மாணிக்கமிலங்கச் செய்த" என்று இசை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது (Perumal, 1984). திருவாசிகையும், சிங்க ஆசனமும் (அரியணை), கற்பகத் தருவும், முத்துப் பந்தலும் இருக்க செவ்வரிபடர்ந்த கருமையான உமை இசைபாடி ஆடிய திருக்கழல் கால்களையுடைய பெருமானாகிய சிவனுக்கு தாணிக்கம் இலங்கச் செய்தது என்று பொருள் காணும் அளவுக்கு இச்செய்தி உள்ளது. இதில் உமை என்பவள் பார்வதி தேவியே ஆவாள். அவள் பாட இறைவன் ஆடியது குறிப்பு. இக்கல்வெட்டு இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தைச் சேர்ந்தது.

கொட்டு மத்தளம் அல்லது கொட்டி மத்தளத்தைக் குச்சியால் அடித்து ஒலியெழுப்புவர் என்கிறார் ஆளவந்தார். இலக்கியங்கள் குறிக்காத இவ்வகை மத்தளம் சோழர் கல்வெட்டுகளில் இரண்டிடங்களில் இடம்பெற்றுள்ளது. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தில் திருப்பதிகம் பாடுவோர்க்கு இசைகூட்டக் கொட்டிமத்தளம் வாசிக்கப்பட்டது (Kalaikovan, 2012).

## சிற்பங்கள் உணர்த்தும் தமிழர் இசைநிலை

கல்வெட்டுக்கள் போன்றே சிற்பங்களும் தமிழனின் இசையறிவை அறியத் துணை செய்கின்றன. தமிழ்நாட்டுக் கோயில்கள் அனைத்திலும் இசைச் சிற்பங்கள் உள்ளன. நடனம் ஆடும் நங்கை அவளுக்குப் பக்கத்தில் யாழிசைப்போர், குழலூதுவோர், முழவுகொட்டுவோர், தாளமிடுவோர் ஆகியோர் உருவங்களைச் சிற்பங்களில் காணலாம். அவற்றைக் கொண்டு கருவிகளின் உருவமைப்பை அறியலாம். கலைஞர்கள் எவ்வாறு அமர்ந்து இசை எழுப்புகின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமெய்யத்தில் குடவரைக் கோவில் உள்ளது. அதில் அரவணையில் பெருமான் அறிதுயில் கொள்ளும் நிலையில் காணப்படுகிறார். அவருடைய தலையின் பக்கத்தில் ஒரு முனிவர் கையில் யாழுடன் நிற்கிறார். அதைப் பார்த்து யாழ் எப்படி இருந்திருக்கும் என்று அறியலாம். நின்ற நிலையில் யாழை எப்படிப் பிடித்திருக்க வேண்டும் என்பதைக் காணலாம்.

திருஎருக்கத்தம் புலியூரிலுள்ள கோயிலில் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் உரு செதுக்கப்பட்டுள்ளது. அவருடைய கையில் யாழ் காணப்படுகிறது. புகழ் பெற்ற யாழ்ப்பாணர் இசைத்தயாழ் எவ்வாறு இருந்தது என்பதை அந்தச் சிற்பத்தைக் கொண்டு அறியலாம். அவர் கையில் இருப்பது சகோடயாழ் என்று கருதப்படுகிறது.

மகாபலிபுரச் சிற்பங்களில் பல இசைக்கலைக் காட்சிகளாகவே உள்ளன. அங்குள்ள வராக மண்டபத்தில் வராக மூர்த்தியின் பக்கத்தில் சிவபெருமானின் முன்பு ஒரு யாழ் காணப்படுகிறது. அங்கு வீணை அல்லது தும்புரு ஏந்திய நாரதரின் சிற்பம் காணப்படுகிறது. இது யாழ் என்று கருதப்படும் சிற்பத்திலிருந்து வேறுபட்டிருப்பதைப் பார்க்கலாம். மாமல்லையிலுள்ள பாறைச் சிற்பங்களில் அர்ச்சுனன் தவசு என்று கருதப்படும் சிற்பக் கூடம் மிக முக்கியமானது. அதில் கின்னர்கள் யாழுடன் இருப்பதைக் காணலாம். நுட்பமாகப் பார்த்தால் இந்த யாழின் வேறுபாடு புலனாகும்.

குமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் கோயில் சிற்பங்களில் பலவிதமான இசைக் கருவிகள் இருப்பதைப் பார்க்கலாம். குறிப்பாக மத்தளம், பம்பை, செண்டை, முழா போன்ற தோற்கருவிகள் பல்வேறு உருவமைப்புடன் இருப்பதைக் காணலாம். ஆனால் ஒவ்வொன்றையும் இனம் கண்டு இதுதான் இக்கருவி என்று கூறுவது கடினம். கருவிகளின் உருவங்களை ஆய்வின் வாயிலாக உறுதிசெய்த பின்னர் சிற்பங்களில் அவற்றை அடையாளம் காண முயல்வது சரியாகும்.

கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள தாராசுரம் கோயிலில் இராமாயணச் சிற்பங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. அதில் போர் முரசு, பேரிகை முதலியவற்றை அறையும் காட்சி சிறியவுருவில் செதுக்கப்பெற்றுள்ளன. வேறுசில கோயில்களில் யானையின் முதுகிலிருந்து டமாரம் அடிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அங்கு ஒரு சிற்பத்தில் ஓர் இசைக் குழுவையே பார்க்கலாம். அதில் யாழ், குழல், தாளம், உடுக்கை, முழவு போன்ற இசைக் கருவிகள் இசைக்கப்படும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. அவை இசைக் கருவிகளின்

அமைப்பு, கையாளும் முறை ஆகியவற்றை அறிவிக்கும் தன்மையுடன் அமைந்துள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு உரிய போலூர் ஆலயச் சிற்பங்களில் பலவகை உருவமைப்பு கொண்ட யாழ்க் கருவிகளைக் காணலாம். முழவு நன்கு தோன்றுகிறது. கிருஷ்ணாபுரம் கோயில் சிற்பத்தில் தும்புருவுடன் நாரதரைக் காணலாம். இது பதினாறாம் நூற்றாண்டுச் சிற்பம். பதினேழாம் நூற்றாண்டு ஆவுடையார் கோயில் சிற்பத்தில் ஒரு பெண் யாழிசைப்பது பொறிக்கப்பட்டுள்ளது. அதே நூற்றாண்டுக்கு உரிய பட்டீசுவரம் கோயிலில் காணப்படும் சிற்பங்களில் இவ்வகையான அமைப்புகள் கொண்ட யாழ்கள் உள்ளன. ஒன்றின் அடிப்பகுதி இலை போன்று விரிந்துள்ளது. இவற்றால் கால வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உணர வாய்ப்புள்ளது. சிற்பங்கள் உணர்த்தும் இசை மரபு தனியான ஆய்வுக்கு உரியது.

சிற்றம்பலம் என்றழைக்கப்படுகின்ற சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் கீழை கோபுரவாயிலில் 108 கர்ணங்களின் நடனச் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தாண்டவங்களோடும் உடுக்கை, மத்தளம், வாத்திய சிற்பங்களும் உள்ளன. கொடிமரத்திற்கு எதிரில் கீழ் பீடத்தில், வாணன் பஞ்சமுகி வாத்தியம் வாசிக்கும் சிற்பமும், குடமுழா இசைக்கும் சிற்பமும் காணப்படுகின்றது. நடராசர் வீற்றிருக்கும் சிற்சபையை சுற்றியுள்ள பிரகார மண்டபத்தின் அடித்தளத்தில் திருவிளையாடற் புராணக் கதைகளை கூறும் சிற்பங்கள் காணப்படுகின்றன. அதில் மத்தளம், உடுக்கை, கைத்தாளம், தம்புரா, உறுமி, வயலின், நாதஸ்வரம், இடக்கி, புல்லாங்குழல், போன்ற கருவிகளை இசைப்பது போன்ற சிற்பங்களும், கோலாட்ட நடனச் சிற்பமும் காணப்படுகின்றன. அத்துடன் யாளி முகம் மேல்நோக்கி வளைந்து இருக்கின்ற வீணை சிற்பம் உள்ளது. இது முத்துசாமி தீட்சீதருக்கு இறைவன் கொடுத்ததாக நூற்குறிப்புகளில் சொல்லப்படுகின்றது. புல்லாங்குழல், நாதஸ்வரம், இவைகளுக்கு பக்கவாத்தியமாக இடக்கி, மத்தளம் சிற்பங்கள் உள்ளன. வடகிழக்கு மூலையிலுள்ள தூணில் நந்திகேஷ்வரர் மிருதங்கம் வாசிப்பது போன்ற சிற்பம் உள்ளது. சிவகாமசுந்தரி அம்மன் சந்நிதியில் சுவற்றில் மத்தளம், பறை உள்ளிட்ட பல இசைக் கருவி இசைக்கும் சிற்பங்கள் உள்ளன.

## முடிவுரை

தமிழிசையின் மகத்துவம் நிலைத்து வாழவேண்டும் என்று பண்டைத் தமிழ் மக்கள் நினைத்தார்கள். ஆலயங்களிலே இசைத் தூண்களை அமைத்தார்கள். அந்தத் தூண்களைத் தட்டினால் இனிமையான இசை ஒலிக்கும். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருநெல்வேலி, திருக்குறுங்குடி, சுசீந்திரம் ஆகிய இடங்களிலே இசைத் தூண்களிலே இன்றைக்கும் இசை எழுகின்றது தமிழிசையின் பெருமைக்குச் சான்றாக ஒலிக்கின்றது. சிற்பங்களும், கல்வெட்டுகளும் இசைக் கருவிகளின் நிலையினையும், அதன் வடிவங்களையும், அதன் பாரம்பரிய விளக்கங்களையும், எதிர்கால தலைமுறைக்கு எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டுதலாகவும், நினைவூட்டுதலாகவும் விளங்குகிறது. பல இசைக்கருவிகள் மறைந்த போதிலும் சிற்பங்கள் வாயிலாக அக்காலத்தில் பயன்படுத்திய இசைக்கருவிகளின் பயன்பாடுகள், உருவங்கள் நமக்கு உணர்த்துகின்றது. ஆலய கல்வெட்டுகளில் காணப்படும் இசைக்கருவிகளின் தனித்துவத்தை இன்றைய இசை வளர்ச்சிக்கு உதவும் வரலாற்று பொக்கிஷம் எனலாம். மத்தளம், முழவு, முரசு, குடமுழா, பறை, உடுக்கை, இடக்கை, சங்கு, சேமக்கலம், யாழ், தும்புரு, வீணை, குழல் போன்ற பல இசைக்கருவிகள் சிற்பங்களில் காணப்படுகின்றன. அன்றைய நிலையிலிருந்த வாத்தியங்களையும் அவற்றின் சிறப்புகளையும் வாசிக்கும் விதம், இசைக்கருவிகளின் உருவ அமைப்பு போன்றவற்றை இன்றைய சந்ததிக்கு எடுத்துக்கூறுவதாக அமைகிறது.

## References


Ilampuranar, (2015) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Kalaikovan, R., (2012) Cholar Kala Adarkalai, Sekar Pathippagam, Chennai, India.

Kudavaayil Balasubramanyam, (2013) Dharasuram Airavatesvara Temple, Agaram Pathippagam, Thanjavur, India.

Perumal, A.K., (1984) Tamilar Isai, International Institute of Tamil Studies, Chennai, India.

Somasundranaar, P.V., (1956) Thirumurugatrupadai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subramaniyan, G., (1996) Alayam Azhivathu Saalavum Nandru, Manivasagar pathipagam , Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License